இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
# PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2023. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 147 | இதழ் : 18 | திகதி : 19.11.2023 | விலை : 50.00

## வத்திக்கானில்
## திருத்தந்தையுடன் இலங்கைத் திருஅவை ஆயர்கள்



இலங்கை ஆயர் பேரவையினர் உரோமபுரியிலுள்ள வத்திக்கான் நகரத்திற்குச் சென்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், அங்கு நடைபெற்ற பல்வேறு மாநாடுகளிலும் பங்கேற்றனர்.

கடந்த 6ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை நடைபெற்ற இந்நிகழ்வில் கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இலங்கையின் 12 மறைமாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்களும் துணை ஆயர்களும் கலந்துகொண்டனர்.

ஆயர்குழு 6ஆம் திகதி வத்திக்கான் புனித பேதுருவானவர் பெருங்கோவிலில் அமைந்துள்ள புனித பேதுருவானவர் கல்லறைப் பீடத்தில் உரோமாபுரியில் கல்வி பயிலும் அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகளுடன் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்ததுடன் தொடர்ந்து திருப் பீடத்தில் அமைந்துள்ள பல்வேறு துறையினரையும் சந்தித்து இலங்கைத் திருஅவை பற்றிக்கலந்துரையாடினர். மேலும் 10ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஐந்தாண்டிற்கு ஒருமுறை நடைபெறும் இச்சந்திப்பு திருஅவையால் 'Ad Limina Visit' என அழைக்கப்படுவது வழக்கம்.

## "அமைதியைக் கட்டியெழுப்ப கிறிஸ்தவர்கள், இந்துக்கள் கைகோர்க்க வேண்டும்"

### தீபாவளிச் செய்தியில் வத்திக்கான் வேண்டுகோள்



இந்த ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி கொண்டாடப்பட்ட இந்துக்களின் பண்டிகையான தீபாவளிக்கு முன்னதாக, மதங்களுக்கிடையேயான உரையாடலுக்கான வத்திக்கானின் துறையானது அதன் "தீபாவளிச் செய்தியை" வெளியிட்டுள்ளது. தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடும் இந்து மதச் சகோதரர்களுக்கு நல் வாழ்த்துக்களைக் கூறி அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ் வாழ்த்துச் செய்தியில் அனைத்து இந்துக்களுக்கும் பண்டிகை வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் அதேவேளை, அமைதி யைக் கட்டியெழுப்ப கிறிஸ்தவர்களும் இந்துக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று அறைகூவல் விடுத்துள்ளது. ☛ 02

## புனித பத்திரிசியார் கல்லூரி வருடாந்தப் பரிசளிப்பு விழா



யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்ட பரிசளிப்புவிழா கடந்த 26ஆம் திகதி மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் அருட்தந்தை திருமகன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் கல்லூரி முகாமையாளர் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சிவகொழுந்து சிறீசற்குணராஜா அவர்கள் பிரதம விருந்தினராகவும் யாழ். போதனா வைத்தியசாலை சிரேஸ்ட விடுதி வைத்தியர் திரு. செல்வரெட்ணம் ஜெகன் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வத்திக்கானில் திருத்தந்தையுடன் யாழ்.ஆயர்



இலங்கை ஆயர்கள் பேரவை வத்திக்கானில் திருத்தந்தையைத் தரிசித்த வேளையில் யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை நேரடியாகச் சந்தித்து நினைவுச் சின்னத்தை வழங்கி உரையாடினார். திருத்தந்தை அவர்கள் ஆயர் வழியாகத் தம் செபங்களை யாழ். மறைமாவட்ட இறைமக்களுக்கு வழங்கினின்றார்.

## அருட்தந்தை எஸ். ஜே. இராஜநாயகம் காலமானார்



இளவாலை புனித யாகப்பர் ஆலயப் பங்கைச் சேர்ந்தவரும் யாழ். மறைமாவட்டக் குருவுமாகிய அருட்தந்தை ஏஸ்.ஜே. இராஜநாயகம் அடிகள் கடந்த 06ஆம் திகதி இறைவனடி சேர்ந்துள்ளார்.

அருட்தந்தை இராஜநாயகம் அடிகள் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மறைமாவட்டப் பங்குகளில் அளப்பரிய பணியாற்றியதுடன் யாழ். பல்கலைக்கழக ஆன்மீகக் குருவாகவும் யாழ். அகவொளி குடும்ப நல நிலைய இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார்.

அவருடைய காலத்தில்தான் அகவொளி குடும்பநல நிலையம் சிறப்பான முறையில் கட்டமைக்கப்பட்டு குடும்ப உளவியல், குடும்ப ஆன்மீகம், உளவள கற்கை நெறிகள் என்பன ஆரம்பிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எல்லோராலும் நேசிக்கப்படும் ஒரு குருவாக வாழ்ந்து அளப்பரிய பணிகள் ஆற்றிய அருட்தந்தையின் பணிவாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறி அவரின் ஆன்மா இறைவனில் அமைதி பெற மன்றாடுவோம்.

## நீங்கள் முழு நாட்டு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சமாதானத்தின் தூதுவர்களாக அனுப்பப்படுகின்றீர்கள்

### புதிதாக நியமனம் பெற்ற இலங்கையின் வெளிநாட்டுத் தூதர்களிடம் யாழ் மறைமாவட்டக் குரு முதல்வர் எடுத்துரைப்பு



இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், கியூபா, எகிப்து, பெல்ஜியம், இத்தாலி ஆகிய நாடுகளுக்குப் புதிதாக நியமனம் பெற்ற இலங்கை தூதர்கள் யாழ் மறை மாவட்ட குரு முதல்வரைச் சந்தித்து இறை ஆசீர் பெற்றுக் கொண்டார்கள்.

கடந்த 04திகதி ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் பொழுது அவர்களோடு உரையாடிய யாழ் மறை மாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் "நீங்கள் வெறுமனே அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மட்டுமல்ல, நாட்டு மக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சமாதானத்தின் தூதுவர்களாக அனுப்பப்படுகின்றீர்கள்" என்று அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

ஒற்றுமையையும் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதே வெளிநாட்டுத் தூதர்களின் தலையாய கடமை என்பதை அவர் அவர்களுக்கு ஞாபகமூட்டினார்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## ஏன் இந்தப் போர்?

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஈழப்போராட்டச் சுழலில் வாழ்ந்த எம்மவர்க்கு "ஏன் இந்தப் போர்?" என்பது விடைகாணாத வினாவாகவேயுள்ளது. இன்று உலகளாவிய நிலையில் பலரது மனங்களில் இவ்வினா மீண்டும் தோன்றியுள்ளது!

உலக அரங்கில் இன்று மதமும், அரசியலும் சிலருக்கு அவர்தம் சுயநலன்களின் ஊற்றுக்கண்களாக இருக்கின்றன. "அதிகாரம், ஆணவம்" என்கிற இரு தண்டவாளங்களின் மேல் அவர்களுடைய வாழ்க்கை பயணித்துக் கொண்டிருக்கிறது. எந்த நேரத்திலும் விபத்துக்குள்ளாகும் பலவீனமான பாதை அது என்பது கூட அவர்களுக்குப் பல நேரங்களில் விளங்குவதில்லை. இன்றைய சூழலில் இஸ்ரேல் - பாலஸ்தீனம் புரிந்துகொள்ள வேண்டிய பேருண்மை இது!

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் 'ஹமாஸ்' குழுவிற்கும் இடையே ஒக்டோபர் 7-ஆம் திகதி தொடங்கிய போர், ஏறக்குறைய ஒரு மாதம் கடந்து, இன்றும் நீடிக்கிறது. இன்னும் சுமூகமான தீர்வு அங்கே எட்டப்படவில்லை. அப்பாவி மக்கள் உணவு, தண்ணீர், மருத்துவ உதவி போன்ற அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் துன்பப்படுவது மிகுந்த வேதனையளிக்கிறது.

இத்தகைய சூழலில், பாலஸ்தீனத்தின் காசாவில் உடனடியாகப் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டி 'பொதுமக்களைப் பாதுகாத்தல் மற்றும் சட்ட மனிதாபிமான கடமைகளைக் கடைப்பிடித்தல்' என்று தலைப்பிடப்பட்ட வரைவுத் தீர்மானத்தை ஜோர்டான் அரசு ஐ.நா. பொதுச் சபையில் அண்மையில் கொண்டு வந்தது வரவேற்கத்தக்கது. ஆயினும், ஜோர்டான் கொண்டு வந்த அந்த மூன்று பக்கத் தீர்மானத்தில் இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தீவிரவாதத் தாக்குதலுக்குக் கண்டனம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஹமாஸ் தீவ-ிரவாதிகளிடம் பிணைக் கைதிகளாக இருக்கும் இஸ்ரேலியர்களை விடுவிப்பது குறித்து, தீர்மானத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே, அமெரிக்கா, கனடா, இந்தியா போன்ற நாடுகள் "இந்தத் தீர்மானம் திருத்தம் செய்யப்பட வேண்டும்' என வலியுறுத்தியுள்ளது கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியது. ஆயி-னும், இந்தத் தீர்மானம் போதிய ஆதரவு இல்லாததால், எவ்வித மாற்றமும் இன்றி வாக்கெடுப்புக்குக் கொண்டு வரப்பட்டது பலரையும் அதிர்ச்சியடைய வைத்தது. ஆகவே, மாற்றம் ஏதுமின்றிக் கொண்டு வரப்பட்ட இந்த வாக்கெடுப்பு ரஷ்யா, பிரான்ஸ், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, சீனா, பாகிஸ்தான், இலங்கை. சிங்கப்பூர் உள்ளிட்ட 120 நாடுகளின் ஆதரவுடன் நிறை வேற்றப்பட்டது. இது உலக அரசியல் சதுரங்க விளையாட்டில் உலகின் வெவ்வேறான நிலைப்பாட்டை வெளிக்காட்டியது. அமெரிக்கா, இஸ்ரேல், ஆஸ்திரியா, பராகுவே உள்ளிட்ட 14 நாடுகள் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்திருப்பதும் இந்தியா, பிரிட்டன், ஜெர்மனி, கனடா, ஜப்பான், உக்ரைன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட 45 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்காததும் மேலும் பல வினாக்களை எழுப்புகின்றன.

மருத்துவ அறுவைச் சிகிச்சை, அரசின் சமூக-அரசி யல் நிலைப்பாடு மற்றும் திட்ட வரைவுகள் போன்ற எல்லா முடிவு-களும் பொதுநலனையும் (Common Good), அதிக பலனை (Greater benefit) கவனத்தில் கொண்டிருக்க வேண்டும்" என்பதே அடிப்படை சமூக அறமாக இருக்கவேண்டும். போர் நிறுத்தம் கோரும் ஐ.நா. வின் தீர்மானத்திற்குப் பின் இஸ்ரேல்-பாலஸ்தீன அப்பாவி மக்களின் அழுகுரலும், வேதனையும், சமூக அக்கறையும் இருப்பதை உணரவேண்டும். இப்போரில் இருதரப்பும் சந்தித்திருக்கும் பேரழிவுகள் ஏராளம். இது வரை இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 3475 குழந்தைகள், 2136 பெண்கள், 480 முதியவர்கள் உட்பட 8306 நபர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 21.048 நபர்கள் காயமடைந்துள்ளனர். 1050 குழந்தைகள் உட்பட 1950 நபர்களைக் காணவில்லை. அதுபோல ஹமாஸ் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலில் 1400-க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளர், பாலஸ்தீனத்தில் சர்வதேசச் சட்டங்கள் அனைத்தும் சிதைக்கப்பட்டு, உணவு, குடிநீர், மருந்துகள், தகவல் தொடர்பு. மின்சாரம் என அனைத்து அடிப்படைத் தேவைகளும் தடைப்பட்ட சூழலில், அப்பாவிப் பாலஸ்தீனியர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இத்தகைய சூழலில், 'எங்கள் மக்கள் மீதான போரை நிறுத்துங்கள், அப்பாவி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்" எனப் பாலஸ் தீனப் பிரதமர் முகம்மது தெரிவித்திருப்பது மனிதாபிமா-னம் கொண்ட, ஈரமுள்ள இதயங்களைக் கலங்க வைக்கின்றது. ஆயினும், 'போர் நிறுத்தத்திற்கு வாய்ப்பில்லை அது ஹமாசிடம் சரணடைவதற்குச் சமமானது. ஹமாசிற்கு எதிரான போரில் வெற்றிபெறும் வரை இஸ்ரேல் போராடும்' என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு அறிவித்திருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. வரலாறு காணாத தாக்குதலைத் தொடுத்துள்ள இஸ்ரேல், போர் நீள்வதற்கான அபாயத்தை மேலும் கூட்டுகிறது. இது உலக சமூகத்தையே அச்சுறுத்துகிறது. நீண்ட மோதல் என்பது உலகளாவிய சமூகத்திற்கு நலன் பயக்காது. இந்தப் போர் நீடித்தால் மிகவும் கடுமையான பாதிப்பை உலகள வில் ஏற்படுத்தும். நாடுகளின் கட்டமைப்பில் மக்களின் வாழ்வாதாரத்தில் பொருளாதார நிலைப்பாட்டில் விலைமதிப்பில்லாப் பாதிப்பை மட்டுமல்ல, மனிதாபிமானப் பேரழிவையும் ஏற்படுத்தக்கூடும்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# இஸ்ரேல்-ஹமாஸ் போர் முடிவுக்கு வர ஐரோப்பிய ஆயர்கள் வேண்டுகோள்!

புனித பூமியில் நிகழ்ந்து வரும் போர் குறித்து மிகவும் கவலையடைந்துள்ள ஐரோப்பிய தலத்திரு அவைகளின் தலைவர்கள் அனைத்து வழிகளிலும் போர்நிறுத்தத்தை உறுதி செய்வதற்கான தங்கள் பொறுப்பைச் செயற்படுத்துமாறு அனைத்துக் கட்சிகளின் அரசியல் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

புனித பூமியில் நிகழ்ந்து வரும் போர் குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள ஐரோப்பியத் தலத்திருஅவைகளின் தலைவர்கள், வாழ்க்கையின் அழிவு என்பது சுதந்திரம், உண்மை, நீதி ஆகியவற்றை வழங்குவதில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது என்று கூறியுள்ளதுடன், அனைத்துலகச் சட்டத்தை நிலைநிறுத்த உலகளாவிய சமூகத்தை அணிதிரளுமாறு தாங்கள் கேட்டுக்கொள்வதாகவும், அமைத்திக்கான தீவிரமான உரையாடல்களை ஊக்குவிக்குமாறும் விண்ணப்பித்துள்ளனர்.

பயங்கரவாதிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும், யூதர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் ஆகிய அனைவரின் உயிர்களும் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ள தலத் திருஅவைகளின் தலைவர்கள், கவனிப்பு மற்றும் வெளியேற்றத்திற்கான வழிமுறைகளை அனுமதிக்க மனிதாபிமான வழிகள் திறக்கப்பட வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

காசா மக்கள் வாழும் கடுமையான சூழ்நிலை, அவர்களின் அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தி அநீதிகளை அனுபவிக்க வேண்டிய கட்டாய நிலையை ஏற்படுத்தியுள்ளது என்றும், அம்மக்களின் இந்தத் துயரநிலை நீண்ட காலமாக நடந்து வருகிறது என்றும் சுட்டிக்காட்டுகிறது.

தீவிரமான பேச்சுவார்த்தைகள் உண்மையிலும் நீதியிலும் நிலையான அமைதியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "அமைதியைக் கட்டியெழுப்ப ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவ் வாழ்த்துச் செய்தியில் தீபாவளித் திருநாளைப் பற்றி விபரிக்கையில், வடமொழியான சமஸ்கிருதத்தில் "தீபங்களின் வரிசை" என்று பொருள்படும் தீபாவளிப் பண்டிகையானது, பொய்யின் மீது சத்தியத்தின் (உண்மையின்) வெற்றியை, இருளின் மீது ஒளியின் வெற்றியை, தீமையின் மீது நன்மையின் வெற்றியைக் கொண்டாடுகின்றது எனக் கூறப்பட்டுள்ளது.

"உன்னத ஒளியான இறைவன் இந்துமதச் சகோதரர்களின் இதயங்களை ஒளிரச் செய்து, அவர்களின் இல்லங்களை ஆசீர்வதித்து, அவர்கள் வாழ்க்கையை அமைதி மற்றும் மகிழ்ச்சியால் நிரப்புவாராக!" என்று ஆசி வழங்குவதுடன், சமாதானம் பற்றிய தீர்க்கதரிசனத்தையும் எடுத்தியம்புகின்றது.

1963ம் ஆண்டிலே, அணுவாயுதப் போர் தொடங்கக் கூடிய விளிம்பு நிலையில் உலக நாடுகள் தத்தளித்த காலகட்டத்திலே, திருத்தந்தை 23 ம் யோவான் அவர்கள் (Pope John XXIII), "உலகத் தலைவர்களும் மக்களும் சமாதானத்துக்காக ஒன்றிணைந்து செயற்படவேண்டும்" என்று உணர்ச்சிபூர்வமாக அறைகூவல் விடுத்து "அவனியில் அமைதி" (Pacem in terris) எனும் சுற்றுமடலினை வெளியிட்ட 60-வது ஆண்டு நிறைவு இந்த ஆண்டு ஆகும். ஆனால், இன்றும் கூட அதே நிலை உலகில் தொடர்வது பெருங் கவலை தரும் நிலையாகும்.

"மனித கண்ணியத்தை அவமதிப்பது", "அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மறுப்பது" மற்றும் "இனரீதியான, மொழிரீதியான, மதரீதியானவன்முறைமற்றும்ஆக்கிரமிப்பு" என்பன இன்றும் கூடத் தொடர்வது துரதிஷ்டவசமாகும். இதனால், சமாதானம் பற்றிய திருத்தந்தை 23 ம் யோவானின் எதிர்பார்ப்பு வெறுமனே ஒரு தொலைதூரக் கனவாகவே இன்றும் தொடர்கிறது.

### அமைதிக்காக ஒன்றுபடுவோம்

அந்தக் கனவை நனவாக்குமாறு நாம் எவ்வழியில் செயற்பட வேண்டும்? இங்கேதான் "சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு மதங்களுக்கிடையேயான உரையாடல் பெரும் பங்கு வகிக்க முடியும்" என்று மேற்படி வத்திக்கான் செய்தி ஊக்குவிப்புத் தருகின்றது.

"உலகில் சமாதானம் நிலவ வேண்டுமென்றால், மதங்கள் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமான ஒரு நிபந்தனையாகி விட்டது" என்று திருத்தந்தை பிரான்சிஸ் பரிந்துரைப்பதை, தீபாவ-ளிச் செய்தி நினவூட்டுகிறது.

"கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்களாகிய நமக்கிடையே காணப்படும் பொதுவான நம்பிக்கைகள், மற்றும் மனிதகுலத்தின் நலனுக்கான கரிசனை என்பவற்றின் உந்துதலால் நாம் சமாதானத்தை உருவாக்கும் கைவினைஞர்களாக மாற முயல்வோம்.

"பிற மத மரபுகளைப் பின்பற்றுபவர்களுடன் கைகோர்த்து, உண்மை, நீதி, அன்பு மற்றும் சுதந்திரம் என்ற நிலைபேறான அத்திவாரத்தின் மீது நமது உலகத்தைக் கட்டியெழுப்ப நாம் ஒன்றிணைந்து செயற்படுவோமாக. இதன் மூலம் அனைவரும் உண்மையான, நீடித்த அமைதியை அனுபவிக்க முடியும்!"

"உங்களுக்குத் தீபாவளி வாழ்த்துகள் உரித்தாகுக!" என்று அத் தீபாவளிச் செய்தி வாழ்த்தி அமைகிறது.


விண்ணக வாழ்வின்
11ம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 12 - 10 - 1979

இறப்பு 14 - 11 - 2012



அமரர்
அருட்பணி. கீதபொன்கலன் லக்ஸ்மன்

நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்.
என் ஓட்டத்தை முடித்து விட்டேன்.
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.
இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது.
நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே,
அதை இறுதி நாளில் ஆண்டவர்
எனக்குத் தருவார்.
2. தீமொ.4:7-8

என்றும் நீங்காத நினைவுடன்
குடும்பத்தினர்.

AD69



# செம்பியன்பற்றில் செபமாலைப் பேரணி

கடந்த ஐப்பசி மாதம் செபமாலை மாதத்தை முன்னிட்டு செம்பியன்பற்று புனித பிலிப்புநேரியார் ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட செபமாலைப் பேரணி 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை டியூக் வின்சன் அவர்களின் வழிநடத்தலில் நடைபெற்ற இப்பேரணி செம்பியன்பற்று கடற்கரை வீதியிலுள்ள மடு அன்னை திருச்சொருபத்தின் முன்பாக ஆரம்பமாகி புனித பிலிப்புநேரியார் ஆலயத்தை வந்தடைந்து அங்கு இடம் பெற்ற திருப்பலியுடன் நிறைவடைந்தது.

திருப்பலி நிறைவில் அன்னையின் திருச்சொரூப ஆசீர்வாதம் இடம்பெற்றதுடன் இப்பவனியில் 300 வரையான இறைமக்கள் பக்தியுடன் பங்கு பற்றியிருந்தனர்.

# சுற்றுச்சூழல் பாதுகாப்பு மானிட வாழ்வின் நெம்புகோல்




***காலநிலை மாற்றம். யதார்த்தமானது. இம்மாற்றத்தை மறைக்க முடியாது. அதீத வெப்பத்தையும், வறட்சியையும் நாம் பட்டறிந்து கொள்கிறோம். இது எம்மை தாக்கும் மௌன வியாதி. இதைக் கண்டும் காணாத விதமாக இருக்கக் கூடாது. கடந்த 50 வருடங்களாக வெப்பத்தின் சடுதியான அதிகரிப்பு முன்னைய 2000 ஆண்டுகளாக இருக்க வில்லை. இது சமுத்திரங்களின் உயிர்க் காற்றை குறைப்பது மட்டுமல்ல, உயிர் வகைகளுக்கு நஞ்சை உற்பத்தியாக்க ஏதுவாகவும் இருக்கிறது***

உலகம் அனைவருக்கும் உரித்தான பொது இல்லம். திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் (ஆசீர்வாதப்பர்) “உண்மையில் ஈகை” என்ற மடலில் இயற்கைப் பாதுகாப்புப் பற்றிய பொருள் அடங்கியதாய் “பச்சைத் திருத்தந்தை” என்று அழைக்கப்பட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு விடயமாகத் திரு அவையும் இதில் ஈடுபாடு கொள்கிறது என்று உலகிற்கு அறிவித்துள்ளார். அதன்பின்னர் இயற்கைப் பாதுகாப்புப் பற்றி 2015 “இறைபுகழ்” என்ற திருத்தூதுச் சுற்றுமடலைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவாகள் அறிமுகப்படுத்துகிறார்.. இதன் தாக்கம் பெரிதாக உணரப்படாததால் மீண்டும் “இறைவனுக்குப் புகழ்” என்ற திருத்தூது அறிவுரை மடலை உலகிற்கு அறிமுகம் செய்து சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியம், முக்கியத்தை உணர்த்துகிறார். இது பற்றிச் சந்தேகம் கொள்பவர்களை உறுதிப்படுத்த முனைகிறார்.

### விரக்தியின் விளிம்பில் எமது நம்பிக்கை.

இப் பிரபஞ்சம் அனைவருக்கும் சொந்தமான பொது இல்லம் என்று நோக்காத பட்சத்தில் மேலும் சுற்றுச்சூழல் சூறையாடப்பட்டு நிவர்த்தி செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்படலாம். அதனால் மனித குலம் ஆதாள பாதாளத்திற்குச் செல்ல வேண்டியதுதான்.

விரக்தியின் விளிம்பில் நின்று ஒரு சிறு ஒளிக்கீற்றுடன் நம்பிக்கையைப் பலப்படுத்த முனைகிறது இம்மடல். நம்பிக்கையைப் பூரணமாக இழக்கும் செயல் தற்கொலைக்குச் சமனாகும். வசதியானவர்களின் சொகுசு வாழ்வினால் பெரும் பகுதி வறியவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதிகமாக ஒரு சுற்று மடலுக்குப் பின் அடுத்த மடல் வெளிவரப் பல்லாண்டுகள் ஆகும். இது ஆறு வருட இடைவெளியில் வருவதன் முக்கியத்துவம் உணரப்பட வேண்டும். மிக விரைவாகவும் அவசியமாகவும் செயற்படும் காலம் கனிந்து விட்டது. இதற்குத் திருத்தந்தை கூறும் பத்து வழிகள்:

### 1. நோக்கில் தெளிவு.

தொழில்நுட்பம் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகாது. இறைவனின் இடத்தைத் தொழில்நுட்பம் நிரப்பும் என்பது மடமை. இதுதான் வழியாயின் நாம் சாவுப் பண்பாட்டை நோக்கிப் பயணிக்கிறோம். இவ்வாறான திட்டங்கள் தனி மனிதனை மட்டுமல்ல, முழு பிரபஞ்சத்தையும் அழிவிற்கு இட்டுச் செல்லும். அன்பு, பிறர் மீது அக்கறை, என்ற நாகரீகத்தை நோக்கி நாம் பயணிப்போம்.

### 2. காலநிலை மாற்றம்.

இது யதார்த்தமானது. இம்மாற்றத்தை மறைக்க முடியாது. அதீத வெப்பத்தையும், வறட்சியையும் நாம் பட்டறிந்து கொள்கிறோம். இது எம்மைத் தாக்கும் மௌன வியாதி. இதைக் கண்டும் காணாத விதமாக இருக்கக் கூடாது. கடந்த 50 வருடங்களாக வெப்பத்தின் சடுதியான அதிகரிப்பு முன்னைய 2000 ஆண்டுகளாக இருக்க வில்லை. இது சமுத்திரங்களின் உயிர்க்காற்றைக் குறைப்பது மட்டுமல்ல, உயிர் வகைகளுக்கு நஞ்சை உற்பத்தியாக்க ஏதுவாகவும் இருக்கிறது.

### 3. எமது நம்பிக்கைக்குச் சவால்

இறைவன் அனைத்தையும் படைக்கும் பொழுது அவற்றை நல்லதெனக் கண்டார். (தொ.நூ. 1:31) திருத்தந்தை இதற்கு இறைமக்களின் ஆன்மீக உந்து சக்தியின் தேவையை முனைப்பிற்குக் கொண்டு வருகிறார். இயற்கைக் கழிவின் காரணியாகிய நாம் இயற்கையோடும், பூமித்தாயுடனும் நல்லிணக்கத் திருப்பயணம் தொடங்கத் திருத்தந்தை அழைக்கிறார்.

### 4. ஒவ்வொருவரையும் சார்ந்துள்ளோம்.

அனைத்தும் ஒருவர் ஒருவரோடு சார்ந்துள்ளது. உலகில் ஒவ்வொன்றும் தொடர்புடையது. தனியாக மீட்பும், நிறைவும் அடைய முடியாது. உலகம் ஒரு தொடர்பு வலையத்தில் உள்ளது. மனித வாழ்வு மறு உயிர் ஜெந்துக்களை விட்டுப்பிரிக்க முடியாது. மானுடச் சுற்றுச்சூழலானது இயற்கைச் சுற்றுச்சூழலோடு மிக ஆழமான தொடர்பிலுண்டு. ஒருவர் மற்றவர் மீது அக்கறை கொள்வதும், சுற்றுச்சூழல் மீது அக்கறை கொள்வதும் ஒன்றே.

### 5. உலகத் தலைவர்களே விழிப்படையுங்கள்

பொறுப்பற்ற மேற்குலக நாடுகளின் வாழ்வு முறைகளைத் திருத்தந்தை சாடுகிறார். மேலும் சில குறுகிய தொகையினரின் செல்வத்தையும், அவர்களது செல்வாக்குப் பலத்தையும் விமர்சிக்கின்றார். மேற்குலக நாடுகளின் வாழ்வு முறைகள்: தங்கள் வசதிக்காகவும், சொகுசு வாழ்விற்காகவும். இயற்கையை மாசுபடுத்துகிறது. வளர்ச்சியடையும் நாடுகள் தரத்தை உயர்த்தவும், உலகளாவிய வகையில் பகிர்ந்து வாழும் திட்டத்தையும் பன்னாட்டு அரசியல் தலைவர்களுக்கு வினைத்திறனுடன் செயற்பட முன்வைக்கிறார்.

### 6. இது மனித குற்றம். இறைவன் திட்டம் இல்லை

. உலகில் 50 வீதமான வறியவர்கள் ஆபிரிக்காவில் வாழ்கிறார்கள். அங்கு காற்று மாசுபடுதல் மிகக் குறைவு. மற்ற நாடுகளின் பழுவைத் தாங்க வேண்டியதாய் உள்ளது. சமகாலச் சுற்றுச்சூழல் அழிவிற்குக் காரணம், இயற்கையில் கட்டுப்பாடற்ற மனித தலையீடு கடந்த 200 வருடங்களாக நடைபெறுதல்.

### 7. அவதானம்! விஞ்ஞான நுட்பம் இறுதி முடிவல்ல

தொழில் - விஞ்ஞான நுட்பம் இயற்கை மாசுபடும் காரணிகளைத் தீர்த்து வைக்கும் என்பதும் நுகர்வோரின் பயனை மட்டும் கருதுவதும் திருத்தந்தை “பயன்பாட்டுத் தற்கொலை” என்கிறார். உண்மைக்குப் புறம்பில்லாத வழியில் செயற்படுதல் என்றெண்ணி தலையிடுதல் பல அழிவுககளின் ஆதாரசுருதி.

### 8. வினைத்திறன்சார் மாநாடுகள்

காலத்திற்குக் காலம் இடம் பெறும் பன்னாட்டு மாநாடுகளில் முடிவெடுக்கப்படும் செயற்திட்டங்கள் திருப்தியாக நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. அதற்கான மேற்பார்வைத் திட்டங்கள் வலுவிழந்து உள்ளது. எடுக்கப்படும் முடிவுகளை நடைமுறைப் படுத்துவதில் உள்ள சிக்கல்கள் மீளாய்வு செய்யப்படுவதில்லை. இருப்பினும் நடைமுறைச் சாத்தியமான வினைத்திறன்சார் வழிகளின் ஊடாக முறைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

### 9. சகல துறையிலும் செயற்படுதல்

தனியாகவும், குடும்பமாகவும், சமூகமாகவும் செயற்பட வேண்டும். மாற்றம் தனி மனிதனிலும், அத்துடன் தேசிய மட்டத்திலும் நடைபெற வேண்டும். உலகப் பாதுகாப்பிற்கு உலகளாவிய விதத்தில் ஒழுக்க நெறிகள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இது விடயத்தில் தாமதம் இன்றி, சந்தேகத்திற்கு இடமின்றி செயலில் இறங்க வேண்டும்.

### 10. ஒரு குடும்பம் நாம்

நாம் எமது மறை, பண்பாடு, சாதியம், தேசியம் சார் சிந்தனைகளைக் கடந்த ஓர் உலகளாவிய குடும்பம். இதை நாம் அறியாமல் இறுக்கமான பிணைப்பில் இப்பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாக இருக்கிறோம். இதுபற்றி விவாத மேடைகளில், கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில், சுற்றுலா விடுதிகளில் பேச்சு நடத்தினால் மட்டும் போதாது. பெரிய மாநாடுகளின் நிறைவில் மரச் செடிகள் நாட்டுதலும், சமூகவலைத் தளங்களில் விளம்பரம் செய்தலும் பயன்கொடுக்காது. அனைத்துப் பண்பாட்டு, ஓரங்கட்டப்பட்ட மக்களும் கைகோர்த்து நின்று உழைக்க வேண்டும். நடைமுறையில் சிந்தனைத் தெளிவுடன் கூடிய ஒருமைப்பாட்டில் தொடங்குவார்கள். உலகம் காப்பாற்றப்படும்.

அருட்பணி அமிர்த யெயசேகரம்

**நாம் அறியாமல் இறுக்கமான பிணைப்பில் இப்பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாக இருக்கிறோம். இயற்கைப் பாதுகாப்புப் பற்றிவிவாத மேடைகளில், கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில், சுற்றுலா விடுதிகளில் பேச்சு நடத்தினால் மட்டும் போதாது. மாநாடுகளின் இறுதியில் மரச் செடிகள் நாட்டுதலும், சமூகவலைத் தளங்களில் விளம்பரம் செய்தலும் பயன் கொடுக்காது.**

இயற்கைத் தாயே! இந்த உலகிலே-யே நன்மை மட்டும் செய்து கொண்டிருக்கும் அற்புதத் தாய் நீ! ஆண்டவரின் மறுவுருவான உம்முன் கரம் கூப்புகிறோம். தாயே எம்மை மன்னித்துவிடு. பலநேரங்களில் மறந்து போகின்றோம். நீ விடும் மூச்சுக்காற்றுத் தான் எங்கள் சுவாசக்காற்று. எமக்கு வாழ்வு கொடுப்பதே நீ என்பதை மறந்து உன்னைக் காயப்படுத்துகின்றோம். உன் கைகளான மரங்களை வெட்டி வீழ்த்துகின்றோம். நெகிழிப்பைகளைப் (பொலித்தீன்) பயன்படுத்தி உனது வளத்தைக் குறைத்துவிட்டோம். எம்மை மன்னித்துவிடு. இனி நாங்கள் மரம் நட்டு மழையைப் பெருக்குவோம். துணிப்பைகளைப் பயன்படுத்தி மண் வளத்தைப் பெருக்குவோம். சுகத்தோடு வாழச் சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம். நம்மைச் சுற்றியுள்ள பகுதிகளின் தூய்மையைக் காப்போம்.

*- நன்றி : இந்த நாள் இனிய நாள்*

# "கடவுளின் மக்களுக்கு"
## ஆயர்கள் மாநாட்டின் 16வது சாதாரண முதல் பொது அமர்வின் கடிதம்



**16வது** ஆயர் மாநாட்டின் முதல் பொது அமர்வின் செயற்பாடுகள் நிறைவடையும் இந்நேரத்தில், இந்த அழகிய வளமூட்டும் அனுபவத்தில் நாம் வாழ்ந்ததை முன்னிட்டு, உங்கள் அனைவரோடும் இணைந்து கடவுளுக்கு நன்றி கூற விழைகின்றோம். இந்த ஆசீர்மிகு காலத்தை உங்களுடன் ஆழ்ந்திணைந்து வாழ்ந்தோம். உங்களது எதிர்பார்ப்புகள், கேள்விகள் மற்றும் பயங்கள் யாவற்றையும் பெற்றுள்ளோம். இரண்டு வருடங்களுக்கு முன் திருத்தந்தை பிரான்சிஸின் வேண்டுதலின் விளைவாக, தூய ஆவியாரின் வழிநடத்துதலில் ஒருவர் கூட விடுபடாமல், இறைமக்கள் அனைவரும் 'இணைந்து பயணிக்க' செவிசாய்த்தல் மற்றும் பகுத்தறிதல், உடனிணைந்த நீடிய செயல்முறைத் திட்டம் இயேசுக் கிறிஸ்துவைப் பின்பற்றும் நற்செய்திப் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.

உரோம் நகரில் செப்ரெம்பர் 30–ஆம் நாள் முதல் நாம் கூடி வந்த அமர்வு இந்தச் செயல்முறையின் முக்கிய கட்டம். பல வழிகளில் இது முன்பு எப்போதும் இல்லாத புதியதோர் அனுபவமாக அமைந்துள்ளது. திருத்தந்தை பிரான்சிஸின் அழைப்பிற் கிணங்கி முதன்முறையாக, ஆண்களும்- பெண்களும் தம் திருமுழுக்கின் வழியாகப் பெற்றிருக்கும் தகுதியை முன்னிட்டு, ஆயர்களின் மாமன்றத்துடன் ஒன்றாக அமர்ந்தது மட்டுமன்றி, அவர்களோடு இணைந்து தேர்தல் செயல்முறைகளிலும் பங்குகொள்ள அழைக்கப்பட்டிருந்தனர்.

நமது இருவகை அழைப்பின் ஒற்றுமை நிறைவிலும், நமது தனி-வரம் மற்றும் பணி செயற்பாடுகளிலும் நாம் இறைவார்த்தைக்கும், பிறரது அனுபவங்களுக்கும் இணைந்து செவிமடுத்துள்ளோம். தூய ஆவியாரில் உரையாடுதல் என்ற முறையில் நாம் உல-கின் அனைத்துக் கண்டங்களிலும் உள்ள சமூகங்களின் செல்வத்தையும், வறுமையையும் பகிர்ந்து, தூய ஆவியார் இன்றைய திரு அவைக்கு எடுத்துச் சொல்வதை ஆய்ந்தறிய முயன்றோம். இவ்வாறு நாம் மேற்கு (இலத்தீன்) மரபு மற்றும் கீழ்த்திசைக் கிறிஸ்தவ மரபுகளுக்கு இடையே உள்ள பரஸ்பரப் பரிமாற்றங்களின் சிறப்பினை உணர்ந்தோம். மற்றைய பல திருஅவைகள் மற்றும் துறவற சபைகளிலிருந்து பங்கு கொண்ட சகோதர சகோதரியரின் பங்களிப்பு நம் உரையாடல்களுக்கு ஆழமான வளமளித்தது.

சிலர் போர் நடக்கும் நாடுகளிலிருந்து வந்து பங்குகொண்டதன் முக்கிய காரணத்தால், நமது ஒன்றுகூடலில் இன்றைய சிக்கல்கள் நிறைந்த உலகின் காயங்களுக்கும், முறையற்ற ஏற்றத் தாழ்வுகளுக்கும் இடையே, நம் இதயங்கள் நம் பணிகளில் ஒருவித ஈர்ப்பை உண்டாக்கியது. கொடிய வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நாங்கள் செபம் செய்தோம். துன்பத்தாலும், ஊழலாலும் கட்டாயப்பட்டு இடம்பெயர்ந்து, அபாயகரமான பாதையில் செல்பவர்களுக்கு நாம் அளிக்கும் நம் உறுதியையும், உடனிருப்பையும் வாக்களித்தோம்.

திருத்தந்தையின் அழைப்பினை முன்னிட்டு, நம்மிடையே பரஸ்பரச் செவிமடுத்தலையும், தூய ஆவியாரின் ஆழ்ந்த உறவை நாடியும் நாம் அமைதிக்கு வேண்டிய இடம் அளித்தோம். தொடக்கத்தில் பல்சமயத் திருவிழிப்பின்போது சிலுவையில் பாடுபட்ட கிறிஸ்துவைத் தியானிக்கையில், ஒற்று மையை முன்னிட்டு நம் தாகம் மேலோங்குவதை நாம் உணர்ந்தோம். "அவர்கள் ஒன்றாய் இருக்கும் படி..." (யோவா 17:21) தம்மையே உலகின் மீட்புக்காகக் கையளித்து, தம் சீடர்களைத் தந்தையிடம் ஒப்படைத்த அவருடைய ஆட்சிச் சிம்மாசனம், உண்மையில் அந்தச் சிலுவையே. இவ்வுலகமும், அதன் ஏழைகளும் எழுப்பும் அழுகுரலுக்குச் செவி சாய்ப்பது எவ்வளவு முக்கியம் என்பதை நம் பணியின் தொடக்கத்தில் திருத்தந்தை நமக்கு நினைவூட்டியதைத் தொடர்ந்து, "கிறிஸ்துவின் உயிர்ப்பு நமக்கு அளித்த எதிர்நோக்கில் உறுதியாய் ஒன்றிணைந்து, நமது பொது வீடாகிய உலகை அவரிடமே ஒப்படைத்தோம் - 'Laudate Deum!' ('கடவுளுக்கே புகழ்!').

ஒவ்வொரு நாளும், மேய்ப்பு மற்றும் நற்செய்திப் பணிகளில் மாற்றங்களின் தேவை ஆழமாக இருந்ததை உணர்ந்தோம். ஏனெனில், நற்செய்தியை அறிவிப்பதில் தன்னையே மையப்படுத்த அல்ல. மாறாக, இவ்வுலகின் மேல் அன்பு கொண்ட கடவுளின் அளவில்லா அன்பிற்கு (காண்க. யோவா 3:16) பணிவிடை செய்வதற்கே தன்னைக் கையளிக்கத் திரு அவை அழைப்புப் பெற்றிருக்கின்றது. புனித பேதுரு சதுக்கத்தின் அருகில் வீடற்று இருந்தோரிடம், மாமன்றத்தின் போது திரு அவையிடமிருந்து தாங்கள் எதிர் பார்ப்பது என்னவென்ற கேள்விக்கு அவர்கள் அளித்த பதில்: "அன்பு!' நம் ஒன்றுகூடலின் நடுப்பகுதியில், ஒக்டோபர் 15 அன்று குழந்தை இயேசுவின் புனித தெரேசாவின் பதிவைத் திருத்தந்தை நினைவுபடுத்தியதற்கு ஏற்ப, இந்த மூவொரு இறை அன்பும், நற்கருணை அன்பும் வேறு பாடுகள், ஆவல்கள் மற்றும் வினாக்கள் ஆகியவற்றைச் சுதந்திரமாகவும், தாழ்ச்சியுடனும் தயங்காமல் வெளிப்படுத்த 'நம்பிக்கையே' நாம் அனுபவிக்கும் தைரியத்தையும், உள் சுதந்திரத்தையும் தருகின்றது.

மேலும், இப்பொழுது என்ன? ஒக்டோபர் 2024 இல் நிகழவிருக்கும் இரண்டாம் அமர்வை முன் நோக்கியிருக்கும் இம்மாதங்கள், 'மாமன்றம்' என்ற சொல் குறிக்கும் சுறுசுறுப்பும், ஒன்றிய நற்செய்திப் பணி ஆர்வமும் அனைவரையும் உறுதியுடன் பங்களிக்க வைக்கும் என்று நாம் நம்புகிறோம். இது சித்தாந்தம் (சிந்தனையியல்) பற்றியதல்ல. மாறாக, இது திருத்தூதர் மரபில் வேரூன்றிய ஓர் அனுபவம். இச்செயல் முறையின் தொடக்கத்தில் திருத்தந்தை நமக்கு நினைவுபடுத்தியது போல, "ஒவ்வொருவரிடமும், அனைவரிடமும் உண்மையான ஈடுபாட்டைத் தூண்டும் ஒன்றிய மாமன்றத் தன்மையின் உறுதியை வெளிப்படுத்தும் திருஅவையின் செயற்பாடுகளை நாம் பயிற்றுவித்தாலன்றி, ஒற்றுமையும், பணியும் ஏதோ புலப்படாதவைகளாகும் அபாயமாக அமைந்துவிடும்" (அக்டோபர் 9,2021). இதில் பல சவால்களும், எண்ணற்ற கேள்விகளும் உள்ளன. முதல் அமர்வின் தொகுப்பு அறிக்கை, நாம் மேற்கொண்ட உடன்பாடுகளைக் குறிப்பிட்டு, வினாக்களைக் கோடிட்டு, நம் பணி எவ்வாறு தொடரும் என்பதைச் சுட்டிக்காட்டும்.

தனது தெளிவுகளில் முன்னேற, ஏழைகள் முதல் அனைவருக்கும் கவனமாகச் செவிசாய்ப்பது திரு அவையின் முழுமையான தேவை. இதில் அதன் சார்பாக ஒரு மனமாற்றத்தின் பாதை தேவைப்படுகிறது. இது ஒரு புகழ்ச்சியின் பாதையும்கூட. "தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகின்றேன். ஏனெனில், ஞானிகளுக்கும், அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர்" (லூக் 10:21). அதாவது, சமூகத்தில் பேச்சுரிமை அளிக்கப்படாதவர்களுக்கும், திரு அவையால் கூட தன்னைப் புறக்கணிக்கப்பட்டவர்கள் என்று உணர்பவர்களுக்கும் காது கொடுத்துக் கவனிப்பது. பல வடிவங்களில் செயற்படும் இனவெறியினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் செவிமடுப்பது.

> தம் திருமுழுக்கின் அழைப்பின் வழியாகப் புனிதத்திற்கு அழைக்கப்பட்ட பொதுநிலையினர் பெண்கள், ஆண்கள் ஆகிய அனைவருக்கும் திரு அவை செவிசாய்க்க வேண்டும். பல நிலைகளில் நற்செய்தியை முதன்முறையாக அறிவிக்கும் மறைபோதகர்களின் சான்றுக்கும், குழந்தைகளின் எளிமைமற்றும் சுறுசுறுப்புக்கும். இளைஞர்களின் உற்சாகத்திற்கும், அவர்களது கேள்விகளுக்கும், முறையீடுகளுக்கும், வயது முதிர்ந்தோரின் கனவுகளுக்கும், ஞானம் மற்றும் ஞாபகத்திறனுக்கும் செவிகொடுக்க வேண்டும்.


குறிப்பாகப் பழங்குடியினரின் கலாசாரங்கள் தூற்றப்படும் சில பகுதிகளில், அனைத்திற்கும் மேலாக. இன்றைய திரு அவை மனமாற்றத்தின் மனநிலையில், அதன் உறுப்பினர்களால் தவறிழைக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் செவிமடுக்கவும், மீண்டும் இது போன்று நிகழாமல் இருக்க உறுதியான அமைப்புகளை எழுப்பவும் கடமைப்பட்டிருக்கிறது.தம் திருமுழுக்கின் அழைப்பின் வழியாகப் புனிதத்திற்கு அழைக்கப்பட்ட பொதுநிலையினர் பெண்கள், ஆண்கள் ஆகிய அனைவருக்கும் திரு அவை செவிசாய்க்க வேண்டும். பல நிலைகளில் நற்செய்தியை முதன்முறையாக அறிவிக்கும் மறைபோதகர்களின் சான்றுக்கும், குழந்தைகளின் எளிமை மற்றும் சுறுசுறுப்புக்கும், இளைஞர்களின் உற்சாகத்திற்கும், அவர்களது கேள்விகளுக்கும். முறையீடுகளுக்கும், வயது முதிர்ந்தோரின் கனவுகளுக்கும், ஞானம் மற்றும் ஞாபகத்திறனுக்கும் செவி கொடுக்க வேண்டும். குடும்பங்களுக்கும், அவர்களது கல்வி சார்ந்த கவலைகள் மற்றும் இன்றைய உலகிற்கு அவர்கள் அளிக்கும் கிறிஸ்தவச் சான்றிற்கும் திரு அவை செவிகொடுக்க வேண்டும். பொதுப்பணிகளில் ஈடுபடவும், ஆய்ந்து தெளிதல் மற்றும் நிர்வாக அமைப்புகளில் பங்களிக்கவும் விரும்புபவர்களின் குரலைத் திரு அவை வரவழைக்க வேண்டும். மாமன்றத்தின் தெளிவுகளில் தொடர்ந்து முன்னேற, திருநிலைபெற்ற பணியாளர்களின் வார்த்தைகளையும், அனுபவங்களையும் ஒன்று சேர்க்கத் திரு அவை குறிப்பாயிருக்க வேண்டும். அருட்பொழிவுப் பணி பெற்று திருஅவையாகிய உடலனைத்தின் வாழ்வுக்கு இன்றியமையாத ஆயர்களின் முதன்மை உடன் பணியாளர்களாய் இருக்கும் குருக்கள், மிகவும் தாழ்த்தப்பட்டவர்களின் திரு அவை அனைத்தின் பராமரிப்பைத் தன் பணி வழியாகக் குறித்துக் காட்டும் திருத்தொண்டர்கள், துறவற வாழ்வைத் தழுவியோரின் குரலாக வரும் இறைவார்த்தை வழியாகத் திருஅவை தனக்கே கேள்விகள் எழுப்ப வேண்டும். இது தூய ஆவியாரின் அழைப்பின் ஒப்பற்ற காவல். தாய்த் திருஅவையானவள் தன் நம்பிக்கையில் பங்குகொள்ளாதோராயினும், உண்மையை நாடுபவர்களாக. உயிர்ப்பின் மறைபொருளோடு இணைந்திருக்க அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் தூய ஆவியார்" (மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கை: Gaudium et Sees 22, 5) செயற்படுபவர்களாக இருப்பவர்களுக்கும் நுட்பமான கவனம் செலுத்த வேண்டும்.

"நாம் வாழும் இவ்வுலகம், அதன் முரண்பாடுகளிலும், நாம் அன்பும், பணிவிடையும் செய்ய அழைக்கப்பட்டிருக்கும் இவ்வுலகம், அதன் பணிகள் அனைத்திலும் திரு அவை அதற்குத் துணை நிற்க விரும்புகிறது. மூன்றாம் பொற்காலத்தின் திரு அவையிடமிருந்து கடவுள் விரும்பும் மாமன்ற முறை பாதையும் இதுவே" (திருத்தந்தை பிரான்சிஸ், அக்டோபர் 17, 2015). நாம் இந்த அழைப்பிற்குப் பதிலளிக்கப் பயப்படத் தேவையில்லை. இப்பயணத்தில் முதன்மையில் செல்பவராம். திரு அவையின் தாயாகிய மரியா, நம்மோடு உடன் பயணிக்கின்றார், மகிழ்ச்சியிலும், கவலையிலும் அவர் தன் மகனை நமக்குக் காட்டி நாம் நம்பிக்கை கொள்ள அழைக்கிறார். அந்த இயேசுவே,
நம் ஒரே நம்பிக்கை!

அருட்பணி பிரான்சிஸ் ஜோசப்

# 1993ம் ஆண்டு யாழ் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட வான்வழிக் குண்டுத் தாக்குதல்

## 30வது ஆண்டு நினைவில்



ருக்கி பெர்னாண்டோ
(சட்டத்தரணி)

**1993** ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.20 மணியளவில் யாழ்ப்பாணம் குருநகரில் உள்ள புனித யாகப்பர் கத்தோலிக்க தேவாலயத்தின் மீது விமானப்படைக்குச் சொந்தமான விமானத்திலிருந்து இரண்டு குண்டுகள் வீசப்பட்டன.இத்தாக்குதலின்போது ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு, பலர் காயமடைந்தனர். இத்தாக்குதல் காரணமாக ஆலயம் மற்றும் அதன் அருகில் இருந்த கட்டிடங்கள் கடுமையான சேதங்களுக்குட்பட்டன. குறித்த தினத்தன்று காலை, புனித யாகப்பர் ஆலயத்தில் நற்கருணை வழிபாடு நடைபெறவில்லை. அதற்கருகிலிருந்த மரியன்னை ஆலயத்திலேயே நற்கருணை ஆராதனை நடைபெற்றது. புனித யாகப்பர் ஆலயத்தில் வழிபாடு இடம்பெற்று இருந்தால் இன்னும் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்திருக்கவும் கூடும்.

யாகப்பர் ஆலயத்தில் இருந்தவர்களில் சிலர் இறை வழிபாட்டிற்காக வந்தவர்கள். ஏனையவர்கள் அன்று வானில் பறந்து திரிந்த இலங்கை விமானப் படை விமானங்கள் குண்டு வீசக்கூடும் என அஞ்சி ஆலயத்தில் சரணடைந்தார்கள். அந்தத் தேவாலயம் அவர்களுக்கு பாதுகாப்பான இடமாக அமையும் என நம்பி அவர்கள் அங்கு வந்தார்கள்.



ஆனால் அவர்கள் நினைத்தது போல பாதுகாப்பானதாக இருக்கவில்லை.

கத்தோலிக்க குருவாக அபிஷேகம் பெற இருந்த தியாக்கோன் ஒருவர் சம்பவத்தின் போது பங்குத்தந்தையின் பங்குப் பணிமனையில் இருந்ததை நினைவு கூர்ந்தார். விமானம் ஒன்று தலைக்கு மேல் பறப்பதை அவர் கேட்டுக் குடியிருப்பை விட்டு வெளியேறி தண்ணீர்த் தொட்டிக்கு அருகில் தஞ்சம் புகுந்தார். அவருக்குக் காலில் காயம் ஏற்பட்டது. தேவாலயத்தின் சமையல்காரரும் அந்நேரத்தில் தியாக்கோனுடன் இருந்தார். தாக்குதலிலிருந்து தஞ்சம் பெற அவர் தேவாலயத்திற்குள் விரைந்தார். இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் அவரும் ஒருவர்.

இப்பங்கின் ஒரு மறையாசிரியரும் இத்தாக்குதலில் கொல்லப்பட்டார். ஒரு பெண்ணின் உடல், தாக்குதல் காரணமாகச் சுக்குநூறாகச் சிதறியது. குறைந்தது ஒரு குழந்தை இத்தாக்குதல் காரணமாக உயிரிழந்துள்ளார். பங்குத்தந்தை மற்றும் அருட்பணிச் சபையின் செயலாளரால் கையெழுத்திடப்பட்ட கடிதத்தில், இருவர் உயிரோடு தீக்கிரையகினார் என்றும், ஏனையோர் கட்டிட இடிபாடுகளில் சிக்கி நசுங்கி உயிரிழந்தார்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. தாக்குதலில் உயிரிழந்த ஒரு பெண், அவர் அணிந்திருந்த நகைகள் மற்றும் அவர் வீட்டை விட்டு வெளியேறும் முன் கணவன் கொடுத்த ரூ. 35 அவரது கைக்குட்டைக்குள் இருந்ததைக் கொண்டு அடையாளம் காணப்பட்டார்.

கொல்லப்பட்டவர்களின் உடல் உறுப்புக்கள் சிதறிக் கிடந்தன. இந்த உடல் உறுப்புக்கள் மற்றும் இடிபாடுகளின் கீழ் இறந்தவர்கள் ஒரு பிரேதப்பெட்டியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டனர். இத்தாக்குதலில் உயிர் பிழைத்த ஒரு வர் தனது அனுபவத்தைப் பகிர்கையில், இத்தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர் தாக்குதல் தொடர்பான கனவுகள் பல நாட்களாகத் தோன்றியதாக தெரிவித்தார். இதன் காரணமாக அவர் மருத்துவ ஆலோசனை பெறவேண்டி இருந்ததாகவும் அவர் கூறினார். ஆலயத்தின் நற்கருணைப் பேழை, பீடப்பகுதி, புனிதரின் சொரூபமும் இத்தாக்குதல் காரணமாக சிதறிக்கிடந்தன. தேவாலயத்தின் மேற்கூரை, மின்கம்பங்கள் மற்றும் சுவர்கள் இடிந்து விழுந்தன.குருமனை, அருட்பணிச் சபைக்கூடம் மற்றும் அருகிலுள்ள கட்டிடங்களும் சேதமடைந்தன. வீசப்பட்ட வெடிகுண்டின் சக்தி அதிகமாயிருந்த காரணத்தினால், ஆலயக் கதவு ஒன்றின் கிறில் ஒரு மரத்தின் மேல் வீசப்பட்டு இருந்தது.

குருநகரில் உள்ள கத்தோலிக்கர்களின் தோற்றம் சுமார் 400 ஆண்டுகளுக்கு (1624ஆம் ஆண்டு வரை) முன்னர் பதியப்பட்டதோடு, 1861ஆம் ஆண்டு கட்டப்பட்ட புனித யாகப்பர் ஆலயம் யாழ்ப்பாணத்தில் உள்ள பழமையான தேவாலயங்களில் ஒன்றாகும். 1993 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்த மிகப்பெரிய ஆலயங்களில் இதுவும் ஒன்றாக இருந்தபடியினால், வானிலிருந்து எளிதாக அடையாளம் காணப்படக்கூடிய ஒரு ஆலயத்தில் இருந்திருக்கும். இந்த ஆலயத்தைச் சூழவுள்ள பகுதியில் தீவிரவாதிகளின் முகாம்கள் இருக்கவில்லை என்று பாதிரியார் மற்றும் திருஅவைச் செயலாளரின் கடிதத்தில்,குறிப்பிடப்பட்டிருந்தது. தேவாலயங்கள் மற்றும் கோவில்களில் தஞ்சம் அடையுமாறு இலங்கை அரசாங்கம் பலமுறை மக்களைக் கேட்டுக்கொண்டதாகவும், அதன்பின் அதன் ஆயுதப்படைகள் இந்தக் கட்டிடங்கள் மீது குண்டுகளை வீசி மக்களைக் கொன்று குவித்ததாகவும் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

> *தாக்குதலில் உயிரிழந்த ஒரு பெண், அவர் அணிந்திருந்த நகைகள் மற்றும் அவர் வீட்டை விட்டு வெளியேறும் முன் கணவன் கொடுத்த ரூ. 35 அவரது கைக்குட்டைக்குள் இருந்ததைக் கொண்டு அடையாளம் காணப்பட்டார். கொல்லப்பட்டவர்களின் உடல் உறுப்புக்கள் சிதறிக் கிடந்தன. இந்த உடல் உறுப்புக்கள் மற்றும் இடிபாடுகளின் கீழ் இறந்தவர்கள் ஒரு பிரேதப்பெட்டியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டனர்*

### தேவாலயக் குண்டுத்தாக்குதலுக்கு முன்னரும் பின்னரும்

தேவாலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு முன்னரும், அதன் பின்னரும், தொடர் குண்டுத் தாக்குதல்கள் பதிவாகியுள்ளன. குறிப்பாக,1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி, யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் (கச்சேரி) குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி, மாவட்டச் செயலாளரும் (அரசாங்க அதிபர்) காயமடைந்தார். தேவாலய குண்டுதாக்குதல் இடம்பெற்ற அதே நாள் மாலை, கொக்குவில் நந்தவில் அம்மன் இந்து ஆலயம் மீது குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. அத்தோடு, மறுநாள் 1993 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி அன்று வரணியில் உள்ள வைரவர் இந்து ஆலயம் மீதும் குண்டுத் தாக்குதல் இடம் பெற்றது. இத்தாக்குதல் காரணமாக இக்கோவில் முற்றாக அழிக்கப்பட்டது. பலர் காயமடைந்துள்ளதுடன், அருகில் உள்ள பல வீடுகளும் சேதமடைந்துள்ளன. தேவாலய குண்டுதாக்குதல் இடம்பெற்று மறுநாள், 1993 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி, வைத்தியசாலை உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள யாழ் பொது வைத்தியசாலை நுழைவாயிலில் இருந்து 50 மீற்றருக்குள் குண்டுகள் வீசப்பட்டன. 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி கிளிநொச்சி மற்றும் முள்ளியவளை வைத்தியசாலைகள் மீது குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

1993 ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதி உள்ளூர் மக்களால் தேவாலயத்தில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) அலுவலகம் மற்றும் மாவட்டச் செயலகம் வரை மௌனப் போராட்ட பேரணி ஒன்று நடத்தப்பட்டது. இப்பேரணியில் பங்குபற்றிய சிலர் தங்கள் வாயைக் கறுப்புத் துணியால் மூடிக்கொண்டு பதாதைகளை ஏந்தியிருந்தனர் என ஒரு பங்கேற்பாளர் நினைவுகூர்ந்தார். ஆர்ப்பாட்டம் நடைபெற்ற அன்று மாலை தேவாலயத்திற்கு அருகிலுள்ள பகுதிகள் மீது மீண்டும் வான்வழித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதல்களில் குறைந்தது 8 பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு மேலும் பலர் காயமடைந்தனர். இத்தாக்குதல்களின் போது பல கடைகளும் சேதமடைந்தன. குறித்த பேரணி நடைபெற்ற பின்னர் டிசம்பர் 3 ஆம் திகதி மாலை தனது வீட்டில் ஷெல் விழுந்ததாகத் தேவாலயத் தலைவர் ஒருவர் கூறினார்.

1993 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி கொழும்பு கத்தோலிக்க பேராயம் வெளியிட்ட சிங்கள மற்றும் ஆங்கில வார இதழ்களான "ஞானார்த்த பிரதீபய" மற்றும் "மெசஞ்சர்" ஆகியவை இத்தாக்குதல்கள் பற்றிய செய்திகளை வெளியிட்டிருந்தன. மேலும், இத்தாக்குதல் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இது தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட துரதிர்ஷ்டவசமான சம்பவம் எனக் கூறியதாக இரு பத்திரிகைகளும் தெரிவித்தன. எனினும், யாழ்ப்பாணக் கத்தோலிக்க ஆயர் அப்போதைய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவுக்கு எழுதிய கடிதத்தில், இந்தக் குண்டுவெடிப்புக்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். இலங்கையின் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை இந்த விடயத்தை அரசாங்கத்திடம் எடுத்துச் சொன்னதாகவோ அல்லது அது பற்றிக் கருத்துத் தெரிவித்ததாகவோ எந்த அறிக்கையும் என்னால் காணமுடியவில்லை.

சேதத்துக்குள்ளான தேவாலயத்தை மீண்டும் கட்டியெழுப்பத் தேவாலய சமூகம் யாவரும் ஒன்று கூடி, "புனித. யாகப்பர் ஆலய புனரமைப்புச் சபை" யை தாபித்தனர். இதில் யாழ்ப்பாண கத்தோலிக்க ஆயரும் அங்கத்தவராக இருந்தார். இது தொடர்பான கூட்டங்கள் மற்றும் கடிதப் பரிமாற்றங்களின் சில குறிப்புகள் கிடைக்கப்பெற்றன. யாழ்ப்பாணத்தில் அப்போது நிலவிய போர் மற்றும் பதட்ட சூழ்நிலைகள் காரணமாக, இலங்கை அரசாங்கத்தால் கட்டுமானப் பொருட்கள் உட்படப் பல பொருட்களுக்கு விதிக்கப்பட்ட தடை காரணமாக ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. இப்பணிகளுக்காக மணல் கொண்டு வருவதற்குக் கூட அரசாங்க அதிபரின் அனுமதி பெற வேண்டிய நிலை காணப்பட்டது. 1993 முதல் 2002 வரை ஜனாதிபதி, புனர்நிர்மாணம், புனர்வாழ்வு மற்றும் சமூகநல அமைச்சு, வடக்கின் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அதிகாரசபை (RRAN) மற்றும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஆகியோருக்கு இடையில் கடிதங்கள் மூலமாகப் பல தடவைகள் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டன. 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி வரை, திருஅவை மக்கள் மற்றும் உபயகாரர்களின் பங்களிப்புகள் மூலம் ரூ. 3,286,240 பெறப்பட்ட தன் விளைவாக ஆலயத்தின் பிரதான பிரிவின் தூண்கள், சட்டங்கள், கூரை மற்றும் சுவர்கள் ஆகியவை பழுது பார்க்கப்பட்டுத் திருத்தப்பட்டன. மேலும், ஆலய அங்கத்தவர்கள் சீமெந்து , மணல் மற்றும் பிற கட்டுமானப் பொருட்களையும் வழங்கி கட்டுமானப்பணிகளுக்கு உதவினர். தேவாலயத் தொடர்பாடல் ஆவணங்களின் படி, 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி 6 இல், ஆலயத்தைத் திருத்துவதற்காக யாழ் பொறியியலாளர் திணைக்களம் ரூ. 9,078,000 தொகையினை மதிப்பீடு செய்தது. எனினும், ஜனவரி 12, 2002 வரை, இராணுவம் உட்பட அரசால் ரூ, 2,350,000 மட்டுமே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### நீதி மற்றும் நினைவுச்சின்னங்கள்

தேவாலயத்தின் பழுதுபார்க்கும் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இத்தேவாலயத்தின் வயதான அங்கத்தவர்கள், திருத்த வேலைகளின் பின்னர் தேவாலயம் அதே அளவு, வடிவமைப்பு போன்றவற்றைத் தக்க வைத்துக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். தேவாலயம் ஆரம்பிக்கப்பட்ட 1624 முதல் 2013 வரை "குருநகர் தேவாலயத்தின் அடையாளங்கள்" பட்டியலிடப்பட்ட பலகையில், 1993 இல் "தேவாலயத்தின் மீதான வான்வழித் தாக்குதல் - 9 பேர் பாதிக்கப்பட்டவர்கள்" என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1986 ஆம் ஆண்டு 31 குருநகர் மீனவர்கள் கடலில் படுகொலை செய்யப்பட்டதையும் (ஊடக அறிக்கைகள் மற்றும் உள்ளூர் மக்கள் கடற்படையைக் குற்றம் சாட்டுவது) மற்றும் 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வெளியேறியதையும் இந்தச் சின்னம் குறிப்பிடுகிறது. தேவாலயத்தில் வெடிகுண்டு ஒன்று விழுந்த இடத்தில், "Honour for the Dead, Warning to the Living, Temple for Justice" என்ற வாசகங்களுடன் ஒரு நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

*(தொடர்ச்சி 06ம் பக்கம்)*

# மரணம் ஒரு மறைபொருள்



அருள்முனைவர்: ஜோண் தோமஸ்

"உலக அதிசயங்கள் ஏழு" என்பர். அவற்றுள் இரண்டு இறந்தவர்கள் மீது கட்டப்பட்டிருக்கும் கட்டடங்கள். ஒன்று, எகிப்திலுள்ள பிரமிட்டுகள் இன்னொன்று, இந்தியாவிலுள்ள தாஜ்மஹால், இவை இரண்டும் அன்புக்கு அழிவில்லை என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

நம்மை அன்பு செய்தவர்கள் அல்லது நம்மால் அன்பு செய்யப்பட்டவர்களின் பூத உடல் மறைந்தாலும், அவர்களது புகழ் உடல் மறைவதில்லை. ஏனெனில், அன்புக்கு அழிவில்லை! உள்ளங்கள் இருக்கும் வரை. எண்ணங்கள் இருக்கும் வரை இறந்தவர்கள். நமது நினைவலைகளில் நீந்திக் கொண்டேயிருப்பார்கள். அதனால்தான் நாம் ஆண்டுதோறும் நவம்பர் 2- ஆம் நாளை இறந்துபோன நம்பிக்கையாளரின் திருவிழாவாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். ஒரு நாள் அவர்களை விண்ணுலகில் சந்திப்போம் என்ற எதிர்நோக்கோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

### இறையியல் கண்ணோட்டம்

புகழ்மிக்க இறையியலாளர்களாகிய கார்ல் ரானர், எட்வர்ட் ஸ்கிலபெக்ஸ், லதிஸ்லாஸ் பொரோஸ் என்பவர்களது பார்வையில் மரணம் என்பது மனிதப் பயண நிலையின் முழுமை, மனித ஆளுமையின் நிறைவளர்ச்சி நிலை என்பதாகும். குடும்பத்தோடும், சமூகத்தோடும், உலகோடும் தொடர்பு கொண்டிருந்த மனிதன், மரணத்தின் வழியாக அகிலத்தோடு தொடர்பு கொள்கிறான். எனவேதான் மரணம் என்பது மனித ஆளுமையின் முழு வளர்ச்சி நிலை எனக் கருதப்படுகிறது.

மனிதன் தான் வாழ்கின்ற நாட்களில் பலவிதமான செயல்களைச் செய்கின்றான். இச்செயல்களுள் மரணம் என்பதும் ஒருவர் தனக்குத்தானே நிகழ்த்துகின்ற ஒரு செயலாகும். இது முற்றான, நிறைவான மனிதச் செயல், மரணத்தின் பொழுது மனிதன் குடும்பம், சமூகம், மதம், கலாசாரம் போன்றவைகளிலிருந்து விடுபட்டு, கடவுளைத் தன்னந்தனியாக முழுமையாகச் சந்திக்கின்றான். எனவேதான் மரணம் என்பது மனிதனின் முற்றான, நிறைவான செயல் என இறையியலாளர்களால் இயம்பப்படுகிறது.

### விவிலியப் பார்வையில் மரணம்

கடவுள் மனிதனை அழியாமைக்கென்று படைத்தார். ஆனால், அலகையின் பொறாமையால் சாவு உலகில் நுழைந்தது என்று திருவிவிலியம் கூறுகிறது (சாஞா 2:23-24), இது நமது முதல் பெற்றோர் கடவுளுக்குக் கீழ்ப்படியாது, பாம்பு வேடமணிந்து வந்த அலகையின் சூழ்ச்சியால் பாவம் புரிந்ததைச் சுட்டிக்காட்டுகிறது. இவ்வாறு அலகையின் சூழ்ச்சியாலும், மனிதனின் பாவத்தாலும் மரணம் நுழைந்துவிட்டதாக திருவிவிலியம் எடுத்துரைக்கின்றது. இதனைப் புனித பவுல் "ஒரே ஒரு மனிதன் வழியாய்ப் பாவம்.இந்த உலகத்தில் நுழைந்தது. அந்தப் பாவத்தின் வழியாய் சாவு வந்தது, அதுபோலவே எல்லா மனிதரும் பாவம் செய்ததால், எல்லா மனிதரையும் சாவு கவ்விக் கொண்டது" (உரோ 5:12) என்று வலியுறுத்துகின்றார், பாவமும், சாவும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு உடையன என்பதைப் புனித பவுல் உரோமையர் 6-ஆம் அதிகாரம் முழுவதிலும் வர்ணிக்கிறார். "நீங்கள் பாவத்திற்கு உங்களையே அடிமையாக்கினால் சாவீர்கள்" (உரோ 6:16) என்றும் எச்சரிக்கிறார். புனித பவுல் சாவின் இன்னொரு பரிணாம வளர்ச்சியையும் கூறுகிறார். அதாவது, பாவத்தின் கூலி சாவு என்பதே அது (உரோ 6:23), இரண்டாம் வத்திக்கான் சங்கமும் 'சாவு பாவத்தின் விளைவு" என்கிறது (இன்றைய உலகில் திருச்சபை, எண். 18). புனித பவுல் இன்னும் ஒரு படி மேலே சென்று சாவைக் 'கடைசிப் பகைவன்" என்கிறார் (1கொரி 15:26). அதாவது, கிறிஸ்துவோடு இணைந்து மாட்சிமை வாழ்வை முழுமையாக அடைய இறுதித் தடையாக இருப்பது சாவு. அதனால் தான் சாவை 'இறுதிப் பகைவன்' என்கிறார். மேலும், 'இந்தச் சாவு எனக்கு ஆதாயம்" (பிலி 1:21) என்றும் சொல்கிறார். அதாவது, அழிவில்லா வாழ்வை அடையச் சாவு ஒரு தேவை என உணர்த்துகிறார். இவ்வாறு பாவத்தின் வழியாய்ச் சாவு நுழைந்தது என்றும், அந்தச் சாவை அடைந்தால்தான் விண்ணுலக வாழ்வில் நுழைய முடியும் என்பதும் திருவிவிலியத்தின் எண்ணங்கள்.

### கிறிஸ்துவின் பார்வையில் மரணம்

இயேசு தமது மரணத்தை நினைத்துத் திகிலும், மனக்கலக்கமும், ஆழ்ந்த துயரமும் அடைந்தார் (மாற் 14:33-34), கண்ணீர் விட்டு அழுதார் (எபி 5:7) என்பதால். அவர் மரணத்தைக் கண்டு அஞ்சியவர் என்று அர்த்தம் அல்ல. சாவைச் சந்திக்க இயேசு வீரத்தோடு காத்திருந்தார் (லூக் 18:31-34), "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலைக் கொடுக்கும் (யோவா 12:24) என்று தமது தற்கையளிப்பைத் தைரியமாகத் தந்தவர் இயேசு. "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிடச் சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா 15:13) என்று சொன்னதைச் சிலுவை மரத்தில் நிறைவேற்றியவர் இயேசு. தமது சிலுவை மரணத்தை மூன்று முறை முழக்கம் செய்தவர் இயேசு, தமது இலட்சியப் பயணத்தின் விளைவாகக் கொடூர மரணம் ஏற்படும் என்பதை உணர்ந்திருந்தும், துணிந்து செயற்பட்டவர் இயேசு, இப்படிப்பட்ட இயேசு பொதுவாக மரணத்தை எப்படி எண்ணினார் என்பது விந்தையாகவே இருக்கிறது!

இலாசரின் மரணத்தைக் கேள்விப்பட்டவுடன் இயேசு சொன்ன வார்த்தை: "இலாசர் தூங்குகிறான் நான் அவனை எழுப்பப் போகிறேன்" (யோவா 11:11) என்பதுதான். தொழுகைக் கூடத் தலைவன் யாயீரின் மகளின் மரணத்தைக் கேள்விப்பட்டவுடன் இயேசு பகிர்ந்த வார்த்தை: "அழாதீர்கள், அவள் இறக்கவில்லை. உறங்குகிறாள்" (லூக் 8:52) என்பதுதான். "சிறுமி இறக்கவில்லை, உறங்குகிறாள்" என்பதை மத்தேயுவும், மாற்கும் பதிவு செய்துள்ளனர் (மத் 9:24, மாற்.5:39), எனவே, ஆண்டவர் இயேசுவின் பார்வையில் மரணம் என்பது உறக்கம் என்பதுதான். இதனையே காலம் சென்ற அருட்தந்தை ம.ப. இயேசுதாஸ், "மரணம் என்பது நீண்ட உறக்கம். உறக்கம் என்பது சிறிய மரணம்" என்று எழுதியுள்ளார். ஆக, உறக்கம் (மரணம்) முடிந்ததும் புத்துணர்வோடு எழுவோம். புதுவாழ்வைக் காண்போம் என்று நம்பலாமல்லவா!

### மரணம் ஒரு மறைபொருள்

மரணம் என்பது முடிவு அல்ல. அது நிலை வாழ்வின் ஆரம்பம் - புதுவாழ்வின் தொடக்கம், மரணத்தின் வழியாக அழியும் நிலையிலிருந்து அழியா நிலைக்கும், இருளிலிருந்து ஒளியின் நிலைக்கும் கடந்து செல்கின்றோம். இதனை அடையாள முறையில் ஒத்தமைவு நற்செய்தியாளர்கள் பதிவு செய்துள்ளனர். அதாவது, இயேசுவின் மரணத்திற்கு முன்பு நண்பகல் பன்னிரண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று, பிற்பகல் மூன்று மணிக்கு இயேசு உயிரை விடுகிறார் (மத் 27:45-46, மாற் 15:33-34, லூக் 23: 44-46) எனவே, இயேசுவின் மரணத்திற்கு முன்பு இருளும், அவரது மரணத்திற்குப் பின்பு ஒளியும் உருவாகிவிட்டன என்பதை உணர்த்துகின்றனர் ஒத்தமைவு நற்செய்தியாளர்கள். இது நம் ஒவ்வொரு வருடைய மரணத்தின் போதும் நிகழ்கிறது என்று நாம் நம்பலாம் அல்லவா! ஏனெனில், கிறிஸ்துவோடு இறந்தால், அவரோடு உயிர்த்தெழுவோம் என்பது தானே புனித பவுலின் கூற்று.

கவிஞர் அப்துல் ரகுமான் 'இது சிறகுகளின் நேரம்' என்ற தனது புத்தகத்தில், 'இறத்தல்' என்ற தமிழ்ச் சொல்லிற்குக் 'கடத்தல்' என்று பொருள் என்கிறார், அதாவது, இறத்தல் என்பது ஒரு நிலையிலிருந்து, இன்னொரு நிலைக்குக் கடந்து செல்லுதல் என்பதாகும். இதனையே நாம் பாஸ்கா மறை பொருள் என்கிறோம். ஏனெனில், பாஸ்கா என்ற சொல்விற்கு, ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குக் கடந்து செல்லுதல் என்பதுதானே பொருள்! ஆகையால்தான் இரண்டாம் வத்திக்கான் சங்கம், "இறந்தோரை அடக்கம் செய்யும் சடங்கு கிறிஸ்தவ இறப்பின் பாஸ்காப் பண்பை அதிகத் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும்" (திருவழிபாடு, எண் 81) என்று வலியுறுத்துகிறது. இதனால் தான் மரணம் என்பது ஒரு மறை பொருள் என்று சொல்கிறோம். ஆகவே. ஆண்டவர் இயேசுவைப் போன்று மரணத்தைத் துணிச்சலோடு எதிர்கொள்வோம், அதன் வழியாக நிலைவாழ்வில் பங்கேற்போம் என்ற எதிர்நோக்கோடு என்றும் வாழ்வோம். ●

***1993ம் ஆண்டு புனித யாகப்பர்...*** ( 5ம் பக்கத் தொடர்ச்சி)

"தலைமுறை தலைமுறையாய் இடிந்து கிடந்த பாழான பட்டணங்களைப் புதிதாய்க் கட்டுவார்கள். இயேசுக்கிறிஸ்துவாகிய நான் நீதியை நேசிக்கிறேன்" என்ற வேதாகம வாக்கியம் இந்த ஆலயத்தின் மேல் கூரையில் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் ஆண்டுதோறும் நவம்பர் 13-ம் திகதி நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்படுவதுடன், இந்தத் துயரச் சம்பவம் நடந்து 30 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டும் நினைவேந்தல் நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

என் அறிவிற்கு எட்டியவரையில், போரின் போது ஓர் ஆலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட முதலாவது பெரிய தாக்குதல் இது. இதனைத் தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் உள்ள நவாலி மற்றும் அல்லைப்பிட்டித் தேவாலயங்கள் மற்றும் மன்னார் மாவட்டத்தில் மடுத் தேவாலயம் மற்றும் பேசாலை ஆலயங்கள் போன்றன மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வழங்கப்பட்ட இறப்புச் சான்றிதழ்களில் இறப்புக்கான காரணம் "வான்வழி குண்டு வீச்சு" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இத்தாக்குதலில் கொல்லப்பட்ட தாய் ஒருவரின் குழந்தைகளுக்கு தலா ரூ. 10,000 வழங்கப்பட்டுள்ளது. எனினும் இறந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் வழங்கப்பட்ட இழப்பீடு பற்றி அதிக தகவல்கள் கிடைக்கவில்லை. ஆலயத்தின் மீது இரண்டு குண்டுகளை வீசிய விமானப்படை விமானத்தில் இருந்தவர்கள் யார்? யார் உத்தரவு பிறப்பித்தது? போன்றவற்றைக் கண்டு பிடிப்பது மிகவும் கடினமாக இருக்கக்கூடாது. ஆலயத்தில் நான் இருந்தபோது, இத்தாக்குதலுக்குப் பொறுப்பானவர்களைப் பொறுப்புக் கூறுவதற்கு ஏதேனும் விசாரணைகள் மற்றும் முயற்சிகள் நடந்ததா என்று கேட்டேன். இதை நான் கேட்ட இருவரும் என் முகத்தைப் பார்த்து சிரித்தனர். இந்தப் படுகொலைக்கு விமானப்படை தான் காரணம் என்பதற்கு ஏராளமான சான்றுகள் மற்றும் ஒப்புதல்கள் இருந்தபோதிலும், விசாரணைகள், வழக்குகள், தண்டனைகள் எதுவும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இது மிகவும் தாமதமான ஒப்புக்கொள்ளலாக இருந்தாலும், அர்த்தமுள்ள ஒப்புதல், மன்னிப்பு, இழப்பீடு மற்றும் பொறுப்பானவர்களைச் சட்டப்பூர்வமாகப் பொறுப்பேற்க வைப்பதற்குக் காலம் தள்ளிப்போகவில்லை.

**ஆதாரங்கள்:** புனித யாகப்பர் ஆலய காப்பகங்கள், 1993 ஆம் ஆண்டுக்கான ஊடக அறிக்கைகள், உயிர் தப்பியவர்களின் சாட்சியங்கள், நேரில் கண்ட சாட்சிகள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள், கத்தோலிக்க குருக்கள் மற்றும் ஆலயப் பணியாளர்கள்.

திருமண வாழ்வின் 50வது ஆண்டு
பொன்விழா வாழ்த்துக்கள்



திரு. திருமதி. செபமாலைமுத்து மரிய கொறற்றி
அன்பையும் அறிவையும் ஊட்டி
வாழ்வாங்கு வாழ வழிசமைத்த எம்
பாசமிகு - ஐயா
தாய் அன்பிற்கு இலக்கணம் வகுத்து
பிள்ளைகளை நல்லதொரு கிறிஸ்தவ
பிள்ளைகளாக வளர்த்தெடுத்த
எங்கள் அம்மா
இருமனமும் ஒருமனமாகி திருமண வாழ்வில்
50 ஆண்டுகள் அகவை காணும்
உங்களை வளமோடு நலம் சூழ்ந்து
பல்லாண்டு காலம் புவிமீது வாழ
உளமார வாழ்த்துகின்றோம்
வாழ்த்துவோர்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
AD70

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 - 12 - 1944 | 13 - 11 - 2021 |

குருத்துவம் : 21.12.1970

## அருட்பணி எட்மன்ட் மைக்கல் அ.ம.தி.

**ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு**

ஆண்டவன் குருவாகி நீரும்
அழகான பணிகள் செய்தீர்
அடியவர் நாமெல்லோரும்
ஆசிகளை நிறைவாய்ப் பெற்றோம்.
ஆன்ம உணர்வாய் நற்கருணை
அன்போடு எமக்குத் தந்தீர்
ஆண்டவன் பாதம் அமர
அனுதினம் நினைத்து செபிப்போம்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காகத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன தொடர்ந்தும் இவருக்காகச் செபிக்குமாறு அன்போடு கேட்டு நிற்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

AD-71

# 31ம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 26 - 10 - 1933 | 31 - 10 - 2023 |

அமரர்

## மோசஸ் தார்சீசியஸ்

**(இளைப்பாறிய ஆசிரியர்)**

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாளெல்லாம் நான் குடியிருக்க வேண்டும்)

நன் நிலம் விழுந்த விதைபோல
நற் பயன்கள் கொடுத்து வாழ்ந்தீர்
உலகிற்கு ஒளியாகத் திகழ்ந்து
இறையாட்சி மலர உழைத்தீர்
உப்பாகக் கரைந்து அழிந்து
பற்பல பணிகள் செய்தீர்
இறைமகன் இயேசு உம்மைக்
கரம் பிடித்து மகிழ்வோடு அழைத்து
நிலைவாழ்வுக் கிரீடம் தந்து
இறை ஒளியில் வாழச்செய்வார்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 30.11.2023 வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு யாழ் புனித மனியன்னை பேராலயத்திலும் காலை 6.00 மணிக்கு அருள் ஆச்சிரமத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்

தகவல்
குடும்பத்தினர்

AD-72

# விண்ணக வாழ்வின் எட்டாம் ஆண்டு



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18 . 09 . 1938 | 18 . 11 . 2015 |

## திருமதி மெற்றில்டா சோதிமலர் இராஜசிங்கம்

**(இளைப்பாறிய ஆசிரியர்)**

எட்டு ஆண்டுகள் எட்டாத தூரத்தில்
எண்ணியே உம்மை நாம் வணங்குகிறோம்
எம் பெருமான் திருவடியில்
எப்போதும் வீற்றிருங்கள்

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 18.11.2023 காலை 6.00 மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்திலும் (OLR), மிருசுவில் அருள் ஆச்சிரமத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபிக்க வேண்டுகின்றோம்.

368/3, பிரதான வீதி, யாழ்ப்பாணம் AD-63

பாசமுடன் நினைவுகூரும்
கணவன், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்

# விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 . 07 . 1958 | 15 . 11 . 2022 |

அமரர்

## திரு. மரியநாயகம் பேதுருப்பிள்ளை

**ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்** [illegible]

ஓராண்டு கழிந்தாலும் ஓவியமாய் உம் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்! உம்மைக் காலமெல்லாம் நாம் மறவோம்
தேனிலும் இனிய உம் குணம் தேடி நாம் உருகுகின்றோம்.
மனம் ஆறாத்துயரோடு வழி நடந்து செல்கிறோம்
பிறையோடும் விடிவெள்ளியாய் வழிகாட்ட
உம்முயிர் துறந்து ஆண்டவர் பாதம் சரணடைந்த உமக்கு
கண்ணீர் மலர்தூவி உம் ஆன்மா விண்ணுலகில்
நித்திய இளைப்பாற்றியை அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக (15.11.2023) அன்று காலை 6.00 மணிக்கு செல்வபரம் புனித யூதாததேயு ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெற்றது

என்றும் உங்கள் நினைவில்
அன்புமனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்

# விண்ணக வாழ்வில்

| 13ம் ஆண்டு நினைவு | 1ம் ஆண்டு நினைவு |
|---|---|
|  |  |
| மலர்வு 16. 08. 1934 – உதிர்வு 18. 10. 2010 | மலர்வு 30. 03. 1937 – உதிர்வு 04. 11. 2022 |
| அமரர் | அமரர் |
| **ஜோசப் பிரான்சிஸ்(குழந்தை)** | **பிரான்சிஸ் பிலோமினா(பவளராணி)** |

AD68

"ஆண்டவரின் இரக்கம் எத்துணை பெரியது
அவர் அளிக்கும் நிலைவாழ்வு எத்துணை மேலானது"
உங்கள் ஆன்மா இறைவனில் மகிழ்ந்திருக்க பிரார்த்திக்கிறோம்

இல 7, கடற்கரை வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

பாசமுடன் நினைவுகூரும்
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்

## புதிய யூபிலி செயலி, பதிவிறக்கம் செய்யப்பட தயார் நிலையில் உள்ளது

புனித யூபிலி ஆண்டின் நிகழ்வுகள் பற்றிய செய்திகள் மற்றும் பதிவுசெய்தல்களுக்காக ஆறு மொழிகளில் புதிய செயலி ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது திருப்பீட நற்செய்தி அறிவிப்புத்துறை.

2025-ஆம் புனித யூபிலி ஆண்டிற்கான "Iubilaeum25" எனப்படும் அதிகாரப்பூர்வ அலை பேசி பயன்பாடு, பதிவிறக்கம் செய்யப்பட தயார் நிலையில் இருப்பதாகக் கூறியுள்ள திருப்பீட நற்செய்தி அறிவிப்புத் துறை, யூபிலி நிகழ்வுகளுக்குப் பதிவு செய்வதை எளிதாக்கும் செயலி, QRக்கான App Store-லிருந்தும் Android க்கான Play Store-லிருந்தும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய செயலி, யூபிலி பற்றிய அனைத்து செய்திகளையும் வழங்கும் என்றும், மேலும் பயனாளிகள் புனித ஆண்டிற்கான திருப் பயணி எனப் பதிவு செய்து இலவச திருப்பயணி அட்டையைப்பெற அனுமதிக்கும் என்றும் மேலும் தெரிவித்துள்ளது நற்செய்தி அறிவிப்புத்துறை.

portal-லில் ஒருமுறை பதிவு செய்து விட்டால், பின்னர் பயனாளி கள் யூபிலி நிகழ்வுகள் மற்றும் புனித கதவுகளுக்கான திருப்பயணத்திற்கும் பதிவு செய்துகொள்ள முடியும் என்றும், மேலும் இது எளிமையான வழியில் திருப்பயணிகள் தாங்கள் விரும்பும் நிகழ்வுகளை பதிவு செய்துகொள்ளவும், அவர்களின் தனிப்பட்ட பகுதியை விரைவாக அணுகவும், புனித கதவிற்குள் நுழைவதற்கான தனித்துவமான QR குறியீட்டைப் பெறவும் அனுமதிக் கிறது என்றும் கூறியுள்ளது அத்துறை.

## யாழ். மறைமாவட்டக் குருக்களின் வருடாந்தத் தியானம்



யாழ். மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்தத் தியானம் இரண்டு பிரிவுகளாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் முதல் குழுவினருக்கான தியானம் கடந்த 06ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை யாழ். பண்டத்தரிப்புத் தியான இல்லத்தில் நடைபெற்றது. நற்கருணைநாதர் சபையைச் சேர்ந்த அருட்தந்தை நிலேந்திரா குணசேகர அடிகள் நெறிப்படுத்திய இத்தியானத்தில் தியான உரைகள், சிறப்பு நற்கருணை ஆராதனைகள், திருப்பலிகள் என்பன இடம்பெற்றதுடன் 58 வரையான குருக்கள் இத்தியானத்தில் பங்கேற்றனர்.

## தமிழ் இறையியல் கல்லூரிக் கற்கைநெறி அகவொளி நிலையத்தில்



யாழ். பிரதான வீதி புனித மடுத்தீனார் கடைத்தொகுதியில் இயங்கிவந்த புனித யோசவ்வாஸ் தமிழ் இறையியல் கல்லூரி, பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள அகவொளி குடும்ப நல நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் அக்கல்லூரியின் கற்றல் செயற்பாடுகள் கடந்த 4ஆம் திகதி ஆரம்பமாகின.

இறையியல் கல்லூரி இயக்குநர் அருட்தந்தை ரவிறாஜ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகள் திருப்பலியைத் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்துக் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார்.

## சீனத் தூதுவர் யாழ். ஆயர் இல்லம் விஜயம்



யாழ். மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான சீனத் தூதுவர் கூீ சென் ஹொங் தலைமையிலான குழுவினர் கடந்த 06ஆம் திகதி யாழ். ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்து மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அடிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலில் குருமுதல்வர் அவர்கள் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக் காலத்தில் சீனா இலங்கைக்கு வழங்கிய பொருளாதார உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

தொடர்ந்து சீன நாட்டுத் தூதுவர் இலங்கை மக்களுக்கு உலர் உணவு வழங்குதல், கடல் தொழிலாளர்களுக்கான தொழில் உதவி வழங்குதல் மற்றும் வீடுகள் அமைத்துக் கொடுத்தல் போன்ற திட்டங்களை இங்கு முன்னெடுக்கப்போவதாகத் தெரிவித்து அதன் ஒரு கட்டமாக சீனா நாட்டு பௌத்த மக்களின் அனுசரணையில் தெரிவு செய்யப்பட்ட 300 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகளையும் வழங்கி வைத்தார்.

## மல்வம் இளையோர் ஒன்றியத்தினால் இரத்ததான முகாம்




மல்வம் பங்கு இளையோர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட இரத்ததான முகாம் கடந்த 05ஆம் திகதி மல்வம் திருக்குடும்ப ஆலய வளாகத்தில் அமைந்துள்ள ஜஸ்ரின் மண்டபத்தில் நடைபெற்றது. ‘உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்’ எனும் கருப்பொருளில் பங்குத்தந்தை அருட்தந்தை அருட்செல்வன் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில் 20 வரையான குருதிக்கொடையாளர்கள் கலந்து இரத்ததானம் வழங்கியிருந்தார்கள்.

## மாணவர்களின் வாசிப்புத் திறன் வலுவூட்டல்



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ்ப்பாண பொதுசன நூலகத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வுகள் கடந்த 06ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடைபெற்றது.

பாடசாலை உப அதிபர் அருட்தந்தை சுமன் அடிகளின் வழிகாட்டலில் கல்லூரியின் நூலகப்பொறுப்பாசிரியர் திருமதி நைல்ஸ் அவர்களின் உதவியுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர்களின் வாசிப்பு திறனை வளர்க்கும் நோக்கோடு நடமாடும் நூலகம், நாடக ஆற்றுகைகள், கருத்துரைகள், புத்தகக் கண்காட்சி என்பன இடம்பெற்றன.

## அன்பிய ஆணைக்குழுக்கூட்டம்



தர்மபுரம் புனித சவேரியார் ஆலயத்தில் முன்னெடுக்கபட்ட யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக் குழுக்கூட்டம் கடந்த 04ஆம் திகதி நடைபெற்றது. மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோய் மரியரட்ணம் C.M.F அடிகள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 2024ஆம் ஆண்டுக்கான செயற்திட்டங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன. இக்கூட்டத்தில் மறைக்கோட்ட அன்பிய இணைப்பாளர்களும் ஆணைக்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## காலமானார்



யாழ்.பேராலயப்பங்கைச் சேர்ந்த ஓய்வுநிலை ஆசிரியர் மோசஸ் தார்சீசியஸ் காலமானார். இவர் பாதுகாவலன் பத்திரிகையில் பல ஆக்கங்களை எழுதியவரும், கொழும்பு மாநகரில் பாதுகாவலன் பத்திரிகை விற்பனையை ஊக்கப்படுத்தியவரும் ஆவார். அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுகின்றோம்

## ஊர்காவல் திருக்குடும்பக் கன்னியர்மட யூபிலி



ஊர்காவற்துறை திருக்குடும்பக் கன்னியர் மடம் ஸ்தாபிக்கப்பட்டதன் 125ஆவது ஆண்டு யூபிலி நிகழ்வு கடந்த 31ஆம் திகதி ஊர்காவற்துறை புனித பரலோக அன்னை ஆலயத்தில் நடைபெற்றது.

கன்னியர்மட முதல்வி அருட்சகோதரி தயாநாயகி அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்புத் திருப்பலியும் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. திருப்பலியை ஊர்காவற்துறைப் பங்குத்தந்தை அருட்தந்தை ஜெயறஞ்சன் அடிகள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அருட்தந்தை அன்ரன் அமலதாஸ், திருக்குடும்பக் கன்னியர்மட மாகாண முதல்வி அருட்சகோதரி தியோபின் குருஸ், அருட்சகோதரிகள், பங்கு மக்களெனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## கியூடெக் நிறுவனத்தினால் குளத்துருசு வான் கதவு நிர்மாணம்



யாழ். கியூடெக் கரித்தாஸ் நிறுவனச் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் செயற்திட்டத்தின்கீழ் மண்டைதீவுப் பிரதேசத்தில் புனரமைப்புச் செய்யப்பட்டுவந்த குளத்துருசு வான்கதவு கட்டுமானப்பணிகள் நிறைவடைந்துள்ளநிலையில் அதன் திறப்பு விழா கடந்த 07ஆம் திகதி நடைபெற்றது.

நிறுவன இயக்குநர் அருட்தந்தை இயூஜின் பிரான்சிஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் திரு. சிவபாலசுந்தரம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டதுடன் வேலணை பிரதேச செயலர் சிவகரன், யாழ். மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள பிரதம பொறியியலாளர் திரு. சுஜீவன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் குளக்கட்டை அண்மித்த பிரதேசங்களில் பயன்தருமரங்களும் நாட்டி வைக்கப்பட்டதுடன் தொடர்ந்து விழிப்புணர்வுக் கருத்தரங்கும் பொங்கல் நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் சமூக ஆர்வலர்கள் விவசாயிகள், பொதுமக்கள், எனப்பலர் கலந்து பயனடைந்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.